விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 045 வள்ளுவர் ஆண்டு 2054 தை 19 வியாழக்கிழமை (02.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## தேர்தலை விரும்புகிறோம்
### அமெரிக்கா

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள தேர்தலை முன்னெடுத்துச் செல்வது இலங்கைக்கு முக்கியமானது என அரசியல் விவகாரங்களுக்கான அமெரிக்க துணை இராஜாங்க செயலாளர் நூலண்ட் தெரிவித்துள்ளார். (ம-7)

## பயங்கரவாத சட்டத்தை நீக்க வேண்டும்
### ஐ.நாவில் உலக நாடுகள் வலியுறுத்து


(ஜெனிவா)

கொடிய பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை நீக்க வேண்டும் என உலக நாடுகள் ஐ.நாவில் வலியுறுத்தியுள்ளன.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் 42ஆவது அமர்வில் இலங்கை மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலிலேயே உலக நாடுகள் இவ்வாறு வலியுறுத்தியுள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்ய 11




## 13ஆவது திருத்தத்தை அமுலாக்க வேண்டும்
# தமிழர்களின் உரிமையை உறுதி செய்ய வேண்டும்
### ஐ.நா அமர்வில் இந்தியா

(ஜெனிவா)

**தமிழ் மக்களின் உரிமை உறுதி செய்யப்பட வேண்டும் என ஐ.நா அமர்வில் இந்தியா தெரிவித்துள்ளது. மேலும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.**

ஜெனிவாவில் நேற்று இடம்பெற்ற 42ஆவது அமர்வில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இந்தியத் தூதுவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார். 11




## 30 ரூபாயால் பெற்றோல் விலை உயர்வு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலையை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்க 11

## 4 அத்தியாவசிய பொருட்களின் விலை
### சதொசவில் குறைப்பு

(கொழும்பு)

சதொச நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் நான்கு அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளது.

இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில், 4 அத்தியாவசியப் பொருட்களின் 11

## பயங்கரவாத தடை சட்டத்துக்குப் பதிலாக
### புதிய பாதுகாப்புச் சட்டம்
### ஐ.நாவில் அமைச்சர் அலி சப்ரி

(ஜெனிவா)

சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு (PTA) பதிலாக உண்மையைக் கண்டறியும் பொறிமுறையையும் புதிய பாதுகாப்புச் 11



## வடக்கில் தொடர் மழை விவசாயிகள் கடும் பாதிப்பு
### இன்றும் மழை தொடரும் என அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் கடந்த இரண்டு நாட்களாக பெய்துவரும் மழை காரணமாக விவசாயிகள் கடுமையான பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக நெல் அறுவடைக்காலம் ஆரம்பமாகியுள்ள நிலையில் தொடர் மழை பெய்து வருவதனால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

காற்றழுத்த தாழ்வு நிலையின் தாக்கம் காரணமாக வடக்கு, வடமத்திய மாகாணங்கள், திருகோணமலை மற்றும் புத்தளம் மாவட்டங்களில் சில பிரதேசங்களில் 11

## 13வது திருத்தம் முழுமையாக அமுலாகும்
### அமெரிக்கத் தூதரிடம் ரணில் உறுதி

(கொழும்பு)

13ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படும் என அமெரிக்கத் தூதுவரிடம் ஜனாதிபதி 11



## தமிழ் மக்களுடன் அமெரிக்கா தொடர்ந்து துணையிருக்கும்
### தமிழ்த் தலைவர்களிடம் அமெரிக்கத் தூதுவர்

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளை படிப்படியாக ஆராய்ந்து தீர்வு காணும் செயன்முறைக்கு அமெரிக்கா தொடர்ந்து துணை நிற்கும் என தமிழ்த் தலைவர்களி 11



**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் வர்த்தகர் வெட்டிப் படுகொலை

(கொழும்பு)

கொழும்பில் வர்த்தகர் ஒருவர் வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பஸ்தரான குறித்த வர்த்தகர் சிறிய வாள் ஒன்றால் நேற்று முன்தினம் மாலை வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கல்கிசை பிரதேசத்தில் இந்த கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம், களுபோவில வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
076 097 3127

# பாவனைக்கு தகுதியற்ற பால்மா விற்பனை

## விசாரணைக்கு உத்தரவு

(கொழும்பு)

மில்கோ நிறுவனம், மனித நுகர்வுக்குத் தகுதியற்ற 635 மெட்ரிக் டன் பால்மாவை அனுமதியின்றி கால்நடைத் தீவனத்திற்காக நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்தமை குறித்து விவசாய அமைச்சு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

பால்மாவை விற்பனை செய்ய வேண்டாம் என அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டிருந்த போதிலும், மில்கோ நிறுவனத்தின் உயர் அதிகாரிகள், பணிப்பாளர் சபையின் அனுமதியின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, இது தொடர்பில் விளக்கம் அளிக்குமாறு, அமைச்சின் செயலாளர் கடிதம் மூலம் மில்கோ தலைவருக்கு அறிவித்துள்ளார். (ம-7)

# மிருசுவில் வாள்வெட்டு ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மிருசுவில் பகுதியில் நேற்று நடைபெற்ற வாள் வெட்டு சம்பவத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மிருசுவிலில் உள்ள உணவகமொன்றில் நேற்று இரவு உணவு எடுப்பதற்காக சென்ற வேளை வாளால் வெட்டப்பட்டுள்ளார்.

பாலாவி, கொடிகாமத்தை சேர்ந்த 27 வயதான ஒருவரே கால், கையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-7)


## விற்பனையாளர் தேவை

யாழ் நகரில் இயங்கும் எமது புடவை நிறுவனத்துக்கு O/L,A/L படித்த பெண் பணியாளர் தேவை. (சேல்ஸ் கேல்ஸ்)

(14478)

சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்
இல. 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.




யாழ்.திருநெல்வேலி தெற்கு,
பரமேஸ்வராச் சந்தி
அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி
விநாயகர் ஆலயம்

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வரா சந்தி அருள்மிகு ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம் வருடாந்த பொதுக்கூட்டம் -2022

காலம் : 19.02.2023 நேரம்: காலை 9.30 மணி
இடம் : ஆலய மண்டபம் தலைமை : உபதலைவர்

எமது பரிபாலன சபையின் (நிர்வாகசபை)19.01.2023 கூட்டத் தீர்மானத்திற்கமைவாக பொதுச்சபைக்கூட்டம் 19.02.2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.பொதுச்சபைக்கான பிரேரணைகள் சமர்பிக்க விரும்புவோர் 15.02.2023க்கு முன்னதாக ஆலய பரிபாலசபை (நிர்வாகசபை) யிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கொவிட்-19 நோய்த்தொற்று காரணமாக கடந்த இரண்டு ஆண்டுகளாக பொதுச் சபைக்கூட்டம் பிற்போடப்பட்டு வந்துள்ளமை யாவரும் அறிந்ததே. - ஆலய பரிபாலன சபை

(14473)

## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



கடந்த 04.01.2023 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் திருமதி
### பாக்கியலட்சுமி சுப்பிரமணியம்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (03.02.2023) வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 424/1/1,
கில்னர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

இங்ஙனம் :
சு.சிறிகாந்தன் [ராஜா] மகன்

(14471)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
03 . 02 . 1939



மககறைவு
04 . 01 . 2023

கடந்த 04.01.2023 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

அமரர் திரு. **வைரமுத்து பாலசுப்பிரமணியம்**

(ஓய்வுநிலை உத்தியோகத்தர் - யாழ்.நீதிமன்றம்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நேற்று (01.02.2023) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. நாளை (03.02.2023) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னார் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்களுக்கும் துண்டுப்பிரசும் மற்றும் பதாகைகள், மலர் வளையம் செலுத்தியோர்களுக்கும் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டில் இருந்து தொலைபேசி அழைப்பு மூலம் துக்கம் விசாரித்தவர்களுக்கும் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இல.286, செம்மணி றோட்,
நாயன்மார்க்கட்டு.

தகவல்:
குடும்பத்தினர்.

(14470)

## உஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திருமதி
### தங்கம்மா ஆறுமுகம்



திதி : 02.02.2023

ஆண்டுகள் இரண்டானதம்மா
ஆனாலும் ஆறவில்லை உன் துயரம்
அரவணைத்தாய் அன்பு காட்டினாய்
ஆறுதலழித்தாய் அக மகிழ்ந்தாய்
பசி தீர்த்தாய் பாசம் காட்டினாய்
இதுவரைக்கும் எம்முடன்
பயணித்த தாயே - இடைவழியில்
ஏன் பயணத்தை முடித்துக் கொண்டாய்
உன் பிரிவால் துயருறும்
பிள்ளைகள்

திரு.ஆறுமுகம் குணபாலசிங்கம், திரு.ஆறுமுகம் தனபாலசிங்கம், திருமதி.விஜயகுமாரி சுந்தரலிங்கம் (ஜேர்மன்), திரு.ஆறுமுகம் விஜயபாலசிங்கம் (கொலன்ட்), திரு.ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் (திடீர் மரணவிசாரணை அதிகாரி), திரு.ஆறுமுகம் இராஜபாலசிங்கம் (ஆசிரியர்).

(14476)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை முறைமையை ஜே.வி.பி.இனி எதிர்க்காது

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு



**(கொழும்பு)**
**மாகாண சபை முறைமை தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் உள்ளதால் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்த விடயத்தினை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்ட போது நாட்டில் அமைதியற்ற நிலை ஏற்பட்டது.

அக்காலகட்டத்தில் சிங்கள அரசியல்வாதிகளுக்கும் தமிழ் தலைமைகளுக்கும் இடையில் பேச்சு நடந்து இணக்கமான சூழலில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்படவில்லை.

இந்தியாவின் தேவை க்காகவே மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆனால், தற்போது நிலைமை மாற்றமடைந்து விட்டது.தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே மாகாண சபை முறைமை உள்ளது. ஆகவே, மாகாண சபை முறைமையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதை எதிர்க்கப் போவதில்லை" என தெரிவித்துள்ளார். (நி)

## இந்திய வரவு-செலவுத்திட்டத்தில் இலங்கைக்கு குறைந்தளவிலான ஒதுக்கீடு

(டில்லி)
இந்திய மத்திய அரசின் 2023 - 24 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் இலங்கைக்கு கடந்த ஆண்டைவிட குறைந்தளவிலான நிதியே ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு-செலவு திட்டத்தில் பூட்டான், மாலைத்தீவுகளுக்கான ஒதுக்கீடுகள் அதிகரித்த போதும் இலங்கைக்கு 150 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனை தவிர நேபாளம், மியன்மார், மங்கோலியா, மொரிஷியஸ், சீஷெல்ஸ் ஆகிய நாடுகளுக்கு இவ்வாறு குறைந்தளவில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தலிபான் ஆப்கானிஸ்தானை கைப்பற்றியதில் இருந்து தொடர்ச்சியாக 2 ஆவது தடவையாக 200 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## நேபாள அமைச்சர் இலங்கை விஜயம்



(நேபாளம்)
நேபாள வெளிவிவகார அமைச்சர் பிமலா ராய் பௌத்யால் நான்கு நாட்கள் விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கை வருகிறார்.

கொழும்பில் நடைபெறும் நாட்டின் 75 ஆவது சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்பதற்காக வெளிவிவகார அமைச்சர் பிமலா ராய் பௌத்யால் இலங்கை வருகிறார்.

இதன் பின்னர் அவர் பெப்ரவரி 5 ஆம் திகதியன்று மீள நாடு திரும்புவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## மாகாண முதலமைச்சர்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவதை எதிர்க்கிறோம்-ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி

(கொழும்பு)
அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் எமக்கு எவ்வித சிக்கலும் இல்லை. எனினும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண ஆணைக்குழுக்கள் ஊடாகவே நிர்வகிக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள சு.க தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

காணி ஆணைக்குழு, மாகாண காணி ஆணைக்குழுவாக செயற்படுமானால் எவ்வித சிக்கலும் இல்லை.

அதேபோன்று மாகாண பொலிஸ் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படுவது சிறந்ததாகும். ஆனால் முதலமைச்சருக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை மாற்றுதல் மற்றும் அவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கான உரிமை வழங்கப்படக் கூடாது.

அரசியல் ரீதியில் பொலிஸ் அதிகாரம் முதலமைச்சருக்கு வழங்கப்படக் கூடாது.

எனவே யதார்த்தத்திற்கு ஏற்ற வகையில், அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். காரணம் சிங்கள மக்கள் மத்தியில் பொலிஸ் அதிகாரத்தை வழங்குவது தொடர்பில் அச்சம் காணப்படுகிறது. எனவே தான் மாகாண முதலமைச்சர்களுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்படுவதை நாம் எதிர்க்கின்றோம்.

சுயாதீன பொலிஸ் ஆணைக்குழுவின் ஊடாக மாகாண பொலிஸ் ஆணைக்குழுக்களை ஸ்தாபிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்கு நாம் தயாராக உள்ளோம். இவற்றின் அடிப்படையில் 13ஆவது திருத்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் எமக்கு எந்த சிக்கலும் இல்லை. பேச்சுவார்த்தைகள் ஊடாக இது தொடர்பில் எம்மால் இணக்கப்பாடொன்றை எட்ட முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

## இந்திய - இலங்கை வெளிவிவகார அமைச்சர்கள் சந்திப்பு



(டில்லி)
இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை நேற்று முன்தினம் புதுடில்லியில் உள்ள வெளிவிவகார அமைச்சில் சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகளின் தற்போதைய நிலை தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவின் வெளி விவகார அமைச்சர் மற்றும் இலங்கை உயர்ஸ்தானிகர் ஆகியோர் ஜெய்சங்கரின் அண்மைய இலங்கை பயணத்தின் பின்தொடர்தல் நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்துள்ளனர். (நி)

## இம்மாத இறுதிவரை சா/த பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்

### பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)
இந்த ஆண்டு இடம்பெறவுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இணையத்தினூடாக மாத்திரம் கோருவதற்கு தீர்மானித்துள்ளதாக பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் எதிர்வரும் 28 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

அனைத்து பாடசாலை விண்ணப்பதாரிகள் தங்கள் பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாகவும் தனியார் விண்ணப்பதாரிகள் தாமாகவே இணையத்தினூடாகவும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம்.

இதற்காக பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic என்பவற்றை அணுகலாம்.

அத்துடன், அந்த திணைக்களத்தின் உத்தியோகபூர்வ கைபேசி செயலியான "Exams SRILANKA" ஐ பயன்படுத்தலாம்.தேவைப்படும் நேரத்தில் சமர்ப்பிப்பதற்காக, பரீட்சார்த்திகள் விண்ணப்பத்தின் அச்சிடப்பட்ட நகலை வைத்திருத்தல் அவசியமாகும்.

பெப்ரவரி 28 ஆம் திகதி மதியம் 12 மணிக்கு மேல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாது எனவும் பரீட்சை விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் திகதிகளை நீடிக்க எந்த முடிவும் எடுக்கப்பட மாட்டாது என்றும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரை வென்றது தென்னாபிரிக்கா



இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில், தென்னாபிரிக்கா அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை, 2-0 என்ற கணக்கில் தென்னாபிரிக்கா அணி கைப்பற்றியுள்ளது.

அதேவேளை கடந்த 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு தொடர்ச்சியாக ஐந்து போட்டிகளில் இங்கிலாந்து அணி தோல்வியடைந்துள்ளது.

மங்காங் ஓவல், ப்ளூம்ஃ போன்டைன் மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 342 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்காது 94 ஓட்டங்களையும் ஹரி புரூக் 80 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், நோக்கியா 2 விக்கெட்டுகளையும் பார்னெல், லுங்கி ங்கிடி, மார்கோ ஜென்ஸன், மஹாராஜ் மற்றும் மார்கிரம் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 343 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, 49.1 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது. இதனால், தென்னாபிரிக்கா அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, டெம்பா பவுமா 109 ஓட்டங்களையும் டேவிட் மில்லர் ஆட்டமிழக்காது 58 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தென்னாபிரிக்கா அணியின் பந்துவீச்சில், ஹொலிஸ்டோன் மற்றும் அடில் ராஷித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் சேம் கர்ரன் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, 102 பந்துகளில் ஒரு சிக்ஸர் 14 பவுண்ரிகள் அடங்கலாக 109 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட டெம்பா பவுமா தெரிவு செய்யப்பட்டார். (4)

# சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து முரளி விஜய் ஓய்வு



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான முரளி விஜய், சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கெதிரான பார்டர்-கவாஸ்கர் கிண்ணத் தொடரில் அறிமுகமானதில் இருந்து இந்தியாவுக்காக 61 டெஸ்ட், 17 ஒருநாள் மற்றும் 9 இருபது-20 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் பெர்த்தில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கெதிரான டெஸ்டில் 38 வயதான முரளி விஜய் இறுதியாக விளையாடியிருந்தார்.

உலகம் முழுவதும் விளையாடுவதற்கான வாய்ப்புகளைத் தேடிக்கொள்வதாகவும் விளையாட்டின் வணிகப் பக்கத்தையும் ஆராய்வதாகவும் விஜய் கூறியுள்ளார்.

தனது ஓய்வு குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மிகுந்த நன்றியுடனும் பணிவுடனும் அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தும் எனது ஓய்வை அறிவிக்கிறேன். 2002-2018 வரையிலான எனது பயணம் எனது வாழ்க்கையின் மிக அற்புதமான ஆண்டுகள். ஏனெனில் இது விளையாட்டின் மிக உயர்ந்த மட்டத்தில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப் படுத்திய பெருமையாகும் எனத் தெரிவித்தார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2757

**வர்ஷா**

நீ செய்யும் தவறுக்கு
எதிர்பாராத நேரத்தில்
தண்டனையும்
நீ செய்யும் நன்மைக்கு
தக்க சமயத்தில் உதவியும்
நிச்சயம் கிடைக்கும்

**சுபாஸ்கரன்**

நாலு பேர் உன்னை நல்லவன் என்று
சொல்ல வேண்டும் என நல்லது செய்யாதே!
நாலு பேர் நல்லா இருக்க வேண்டும்
என்பதற்காக நல்லது செய்!



**கண்மணி**

எங்க அப்பா பெரிய பயில்வான்.
பஸ்ஸை ஒரு கையாலேயே தள்ளிடுவாரு
இது என்ன பிரமாதம் எங்க அப்பா
பஸ்ஸை ஊதியே தள்ளிடுவாரு



நிஜமாவா! ஆமாம்.
எங்க அப்பா பஸ் கண்டக்டர்

**நிர்மலன்**

எதிரில் எதிரிகள் இல்லை என்று
கர்வம் கொண்ட வேளையில்
காலடியிலேயே துரோகிகள் இருப்பதை
உணராமல் விட்டு விடுகிறோம்.



**விஷ்ணுகா**

பொண்ணை எங்களுக்கு ரொம்ப பிடிச்சுப் போச்சு
பொண்ணுக்கு என்ன போடுவீங்க
மாப்பிளைக்கு என்ன போடுவீங்க



இப்ப எல்லாருமே மாஸ்கத்தானே போடுறாங்க
அதயே ரெண்டு பேருக்கும்
ஒரு வருசத்துக்கு வாங்கிக் குடுத்திடுறோம்

**தயாபரன்**

அம்மா 4 நாட்டுக்கோழி முட்டை
வாங்கிட்டு வரச் சொன்னாங்க



எந்த எந்த நாடுன்னு கேட்டதற்குப்
போய் இங்க உட்கார வைச்சுட்டாங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் அமைப்புகளின் முதலீட்டுக்காக நாட்டை காட்டிக் கொடுக்க முடியாது

## சரத் வீரசேகர திட்டவட்டம்

(கொழும்பு)

**புலம்பெயர் அமைப்புக்களின் முதலீடுகளுக்காக நாட்டை காட்டிக் கொடுக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

30 வருடகால யுத்தத்தின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியாதவற்றை தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பெற்றுக் கொள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் முயற்சிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கை மீது உண்மையான பற்று காணப்படுமாயின் கூட்டமைப்பினர் புலம்பெயர் அமைப்புக்களின் முதலீடுகளை தாராளமாக பெற்றுக் கொடுக்க முடியும் என்றும் புலம்பெயர் அமைப்புக்களின் முதலீடுகளுக்காக நாட்டை காட்டிக் கொடுக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் புலம்பெயர் தமிழ் அமைப்பினரும் ஜனாதிபதிக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்கின்றனர். எக்காரணிகளுக்காகவும் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இடமளிக்க முடியாது என ஜனாதிபதி தலைமையில் அண்மையில் இடம்பெற்ற சர்வகட்சி கூட்டத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளதாக சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை கிடையாது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை தவிர ஏனைய அதிகாரங்கள் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதற்கு தடையாக இருக்கபோவதில்லை. ஆனால் நாட்டின் ஒருமைப்பாட்டையும் இன நல்லிணக்கத்தையும் சீர்குலைக்கும் வகையில் 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த ஒரு போதும் இடமளிக்க முடியாது என்றும் சரத் வீரசேகர திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். (நி)

# இலங்கை வந்தடைந்தார் விக்டோரியா நுலண்ட்

(கொழும்பு)

அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களிற்கான உதவி இராஜாங்க செயலாளர் விக்டோரியா நுலண்ட் இலங்கை வந்தடைந்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் அவரை வரவேற்றுள்ளார்.

இலங்கை தனது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் எடுத்துவரும் முயற்சிகளிற்கு அவர் தனது ஆதரவை வெளியிடுவார். (நி)

# பாராளுமன்ற ஒத்திவைப்பை அரசாங்கம் நிறுத்த வேண்டும்

## பேராசிரியர் சரித ஹேரத்

(கொழும்பு)

பாராளுமன்றத்தை ஒத்திவைத்து முட்டாள்தனமான செயல்களை செய்யும் அரசாங்கங்கள் உலகில் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்துள்ளார்.

மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பதிலாக அரசாங்கம் பல்வேறு நிகழ்ச்சி நிரல்களில் செயற்பட்டு நாட்டை பாதாளத்திற்கு இட்டுச் செல்வதாக தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் இந்த முட்டாள்தனத்தை அரசாங்கம் இனியாவது நிறுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தேர்தலுக்கு நாங்கள் தயாராக உள்ளோம் என்றும் அவர் கூறினார். (நி)


# 31 ஆம் நினைவு நாள் அழைப்பிதழ்

உயிர்ப்பும் உயிரும் நானே என்னுள் விசுவாசம் கொள்பவர் இறப்பிலும் உயிர் வாழ்வர் (அரு.11:25)

கடந்த 04.01.2023 (புதன்கிழமை) அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவன்



மண்ணில் 20.05.1964 விண்ணில் 04.01.2023

அமரர். அந்தோனிமுத்து அருள்ராஜா

அவர்களது 31 ஆம் நாள் நன்றித்திருப்பலி நாளை 03.02.2023 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 7.00 மணியளவில் புனித சூசையப்பர் தேவாலயத்திலும் (புதுக்குடியிருப்பு) தொடர்ந்து புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் மதியம் 12.30 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்குமாறு கேட்டு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-5882)

சுவையூற்று வீதி, 9 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு. குடும்பத்தினர்.



# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் விஞ்ஞான பாட ஆசிரியரான திருமதி.வளர்மதி ராஜ்குமார் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்.பொன்னம்பலம் தெய்வேந்திரன்



அவர்கள் 31.01.2023 (செவ்வாய்க்கிழமை) அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5881)

யாழ். இந்து மகளிர் கல்லூரி சமூகம்.


# இராசிபலன்

02.02.2023 தை 19, வியாழக்கிழமை துவாதசி முன்னிரவு 6.36 மணிவரை

திருவாதிரை முழுவதும் சுபநேரம் 8.06-9.36 மணிவரை இராகுகாலம் 2.06-3.36 மணிவரை

சந்திராஷ்டமம் கேட்டை

வளவன்




நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் குதூகலம் ஏற்படலாம், நண்பர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும், போசன சுகமுண்டு, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.




குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம்.




எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொன்னான நாள், செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம்.




பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வரலாம், கனவு பலிதமுண்டு கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.




தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், இனிமையாகப் பேசி காரியம் சாதிக்கும் நாள், உறவினர் வழியில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு.




வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு, வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகரிக்கலாம், நீங்கள் நல்லவர் என நினைத்தவர் அற்பத்தனமாக நடந்துகொள்ளலாம்.




குடும்பநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வியாபாரத்தை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.




உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், ஆரோக்கியமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.




உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.




எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொலை தூரத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

ஒற்றுமை இல்லாதவர்களுடன் கூடியிருப்பதை விட தனியாக இருப்பது மேல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கசூரினா கடற்கரை பிரதேசத்தில் எல்லைப்படுத்தல் முன்னெடுப்பு



(அராலி)

கசூரினா கடற்கரை பிர தேசத்தின் எல்லைப்படுத்தல், அபிவிருத்தி ஒதுக்கத்திலிருந்து சபையின் 4.2 மில்லியன் ரூபாய் செலவில் 1410 அடி நீளமான நிரந்தர முட்கம்பி வேலி அமைத்து முடிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஈழுத்து சிதம்பரத்தின் தீர்த்தக்கரையின் மூலம் கசூரினா கடற்கரை பிரதேசத்திற்குள் பிரவேசிப்பதும்' இராணுவ முகாம் பிரதேசத்திலிருந்து கடற்கரை பகுதிக்கு பிரவேசிப்பதும் முற்றாகத்தடுக்கப்பட்டுள்ளது. (4-6-104)



கரவெட்டி பிரதேச மருத்துவமனைக்கு மாணிக்கவாசகர் வித்தியாலய பழைய மாணவர்களால் மருந்துப்பொருட்கள் நேற்று கையளிக்கப்பட்டன. (படம்- மகாலிங்கம்)

## வரி அதிகரிப்பிற்கு எதிராக

# யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**அரசாங்கத்தின் புதிய வரி அதிகரிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரால் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.**



நேற்று நண்பகல் 12 மணியவில் யாழ். பல்கலைக்கழக முன்றலில் இப்போராட்டம் இடம்பெற்றது.

இதன் போது "அநீதியான வரிவிதிப்பை நிறுத்து", "அரசின் ஊழலால் விழுந்தவர்களை வரி ஏறி மிதிக்கிறது", "பணத்தை எடுத்தவரிடம் கேட்பதே நீதி எங்களிடம் கேட்பது அநீதி" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு விரிவுரையாளர்கள் அமைதியான முறையில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-6-33)

## நிரோஷிற்கு எதிரான வழக்கு

# சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெறுவதற்கான ஆவணத்தை விரைவில் சமர்ப்பிக்கவும்

## பொலிஸாருக்கு நீதிமன்று உத்தரவு

(யாழ்ப்பாணம்)

நிலாவரை கிணற்றுப் பகுதியில் தொல்லியல் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குத் தடை ஏற்படுத்தினார் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை தவிசாளர் தி.நிரோஷிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கான ஆவணத்தினை இம்மாத இறுதிக்குள் தயார் செய்து மன்றில் சமர்ப்பிக்குமாறு அச்சுவேலி பொலிசாருக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்று மல்லாகம் நீதிமன்றில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, வழக்கினை முன்கொண்டு செல்வதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு ஏன் அனுப்பப்படவில்லை என பொலிஸாரை நோக்கி நீதிபதி வினவியதுடன் இம் மாதத்திற்குள் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கான ஆவணத்தை தயார் செய்யுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது. (4-6)

# மன்னாரில் சரிந்து விழுந்த காற்றாலை மின் கோபுரம்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மிக வேகமாக அமைக்கப்பட்டு வந்த காற்றாலை மின்சார கோபுரம் ஒன்று கட்டுமானப் பணியின் போது உடைந்து விழுந்துள்ளது.

மன்னார் நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட நறுவிலிக்குளம் கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்டு வந்த கோபுரங்களில் ஒன்றே கடந்த மாதம் இவ்வாறு உடைந்து விழுந்துள்ளது.

அப்பகுதியில் கால்நடைகள், விவசாயிகள் மாத்திரம் சென்று வரும் பகுதி என்பதால் சம்பவம் வெளியில் தெரியாமல் இருந்துள்ளது. எனினும் அப்பகுதியில் செய்கை பண்ணப்பட்டிருக்கும் விவசாய நடவடிக்கைகளை பார்வையிடச் சென்ற போது கோபுரம் சரிந்து கிடப்பதையும் கனரக பளுதூக்கும் கிரேன் வாகனம் சேதமாகி இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

குறித்த கோபுரம் சரிந்து கிரேன் மீது விழுந்த போதும் கிரைன் ஓட்டுநர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக அறிய முடிகிறது. (4-6-285)

## கழிவகற்றல் பொறிமுறை

# யாழ்.போதனா-மாநகர சபை நேற்று விசேட கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட யாழ். போதனா மருத்துவமனையில் மருத்துவக் கழிவுகளை உரிய முறையில் அழிப்பதற்கு யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் ஒரு இடத்தினை தெரிவு செய்து அந்த இடத்தில் கழிவகற்றல் பொறிமுறை உருவாக்குவது தொடர்பில் நேற்று யாழ். மாநகர சபையில் விசேட கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாந்கர சபையின் முதல்வர் இமானுவேல் அனோல்ட் ,போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி, மாநகர சபையின் ஆணையாளர், மாநகர சபையின் பொறியியலாளர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் குறித்த கலந்துரை யாடலில் கலந்து கொண்டனர். குறிப்பாக மருத்துவமனையின் மருத்துவக் கழிவுகள் தற்போது தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அழிக்கப்படுகின்றன.

எனினும் யாழ்ப்பாண மருத்துவமனையானது யாழ்ப்பாண குடா நாட்டில் உள்ள அனைவரது மருத்துவத் தேவையை பூர்த்தி செய்கின்ற ஒரு மருத்துவமனை என்பதனால் அதிகளவு மருத்துவக் கழிவுகள் ஒவ்வொரு நாளும் சேகரிக்கப்படுகின்றன.

எனவே அந்த கழிவுகளை யாழ்ப்பாண மாநகரத்துக்குட்பட்ட பகுதியில் ஒரு இடத்தில் பாதுகாப்பான முறையில் பொது மக்களுக்கு இடைஞ்சல் இல்லாத வகையில் அதனை அழிப்பதற்கு ஒரு இடத்தினை தெரிவு [illegible] (4-6-33)

# இந்திய மீனவர்களின் படகு உரிமைக்கான வழக்கு மார்ச் மாதம் ஒத்திவைப்பு

(அராலி)

இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட நான்கு இந்திய மீனவர்களின் படகு உரிமைக்கான வழக்கு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு கட்டளைக்காக தவணையிடப்பட்டுள்ளது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி பிரவேசித்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட நான்கு படகுகளின் உரிமை தொடர்பான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதவான் ஜெ. கஜநிதிபாலன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த படகுகளிற்கான உரிமையாளர்களும் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தனர்.

வழக்கினை ஆராய்ந்த நீதவான் மார்ச் மாதம் முதலாம் திகதி கட்டளைக்காக திகதியிட்டுள்ளார். வழக்கு தொடுநர் சார்பில் யாழ். மாவட்ட நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரி எம். ராஜேந்திரா முன்னிலையாகி இருந்தார். (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி பிரதேச சபை

### வீதிகளின் பெயர்கள் தொடர்பிலான பொதுமக்கள் அபிப்பிராயம் பெற்றுக்கொள்ளல்.

இலங்கை சனநாயகக் குடியரசின் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட 1036 வீதிகளின் பெயர்கள் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு ஏற்ற நிலையில் உள்ளன.

எனினும் மேற்படி வீதிகளின் பெயர்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளமையினால் எமது பிரதேச சபையின் 19.01.2023 ம் திகதிய சபை அமர்வின் 74/19.01.2023 ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைவாக வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக அனுமதி பெறப்பட்டுள்ள மேற்படி 1036 வீதிகளின் பெயர் தொடர்பான பொதுமக்களின் பகிரங்க ஆட்சேபனைகள் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான அனுமதி பெறப்பட்டுள்ள வீதிகளின் பெயர்களை தலைமை அலுவலகத்திலும், கச்சாய், வரணி, மிருசுவில், சரசாலை, கைதடி, நாவற்குழி ஆகிய உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும்.

மேற்படி வீதிகளின் பெயர்கள் தொடர்பான ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 28.02.2023ம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்னர் **தவிசாளர், சாவகச்சேரி பிரதேச சபை, A9 வீதி, கொடிகாமம்** என்னும் முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஆட்சேபனைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தலைவர்.**
**சாவகச்சேரி பிரதேச சபை.** **02.02.2023** (சி-5885)


## புலிப் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும் தமிழ் பிரிவினைவாதம் தோற்கடிக்கப்படவில்லை

### ஜனாதிபதியை எச்சரித்த உதய கம்மன்பில

(கொழும்பு)
இலங்கை அரசியலில் பதவி வகித்த முன்னாள் ஜனாதிபதிகள், மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்காததற்கு காரணங்கள் உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு இவ்வாறு விளக்கமளித்துள்ளார்.

இலங்கையில் புலிப் பயங்கர வாதம் தோற்கடிக்கப்பட்டாலும் தமிழ் பிரிவினைவாதம் என்பது தோற்கடிக்கப்படவில்லை.

இலங்கைக்கு வெளியே புலிகளின் செயற்பாடுகள் தற்போது முன்பைவிட சிறப்பாக செயற்படுகிறது.

தமிழீழம் என்ற நாடு நிலமற்ற நாடாக நிறுவப்பட்டுள்ளதாகவும் இது நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்று அழைக்கப்படுவதாகவும் உதய கம்மன்பில தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் எதிர்காலத்தில் பிரிவினைவாத யுத்தம் இலங்கை இராணுவத்திற்கும் வடக்கில் பொலிஸாருக்கும்இடையில்நடைபெறும்.

எனவே இந்த நாட்டை பிளவுபடுத்த வேண்டாம் என ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## நுகர்வோர் அதிகார சபையினால் 111 மில்லியன் ரூபாய் அபராதம்

(கொழும்பு)
2022 ஆம் ஆண்டு வியாபார நிலையங்களில் நுகர்வோர் அதிகார சபை முன்னெடுத்த சோதனை நடவடிக்கைகளுக்கு அமைய தொடரப்பட்ட வழக்குகளில் 111 மில்லியன் ரூபாய் அபாராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 13 ஆயிரத்து 980 சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதில் 13,389 வழக்குகள் நிறைவடைந்துள்ளதுடன் அத னூடாக இந்த அபராதத் தொகை கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிஸ்கட், மருந்துகள், குழந்தைகளுக்குப் பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் உள்ளிட்டவை தொடர்பில் கடந்த ஆண்டு சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

2005 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் நுகர்வோர் அதிகார சபை சுமார் 90 ஆயிரம் சுற்றி வளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான வர்த்தமானியில் சார்ள்ஸூம் ஒப்பம்

(கொழும்பு)
தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்புரிமையிலிருந்து பி.எஸ்.எம்.சார்ள்ஸ் விலகவில்லை என தேர்தல்கள் ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் திருமதி.சார்ள்ஸ் கையொப்பமிட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பான தகவல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலில் சார்ள்ஸ் கையொப்பமிட்டதை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார். (நி)

## ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரை சந்தித்தார் உலக வங்கியின் மூத்த பொருளாதார நிபுணர்

(கொழும்பு)
உலக வங்கியின் மூத்த பொருளாதார நிபுணர் ரிச்சர்ட் வோக்கர், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் உலக வங்கியின் உதவித்திட்டம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதன்படி, நிதிக் கண்காணிப்பு மற்றும் கடன் முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் உட்பட பல விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 20¼ சூரி 8 செவ் 9 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்: O/L (பூசகர்)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10580 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 4<br>கி.பா: 48 சூரி.செவ் 8 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: நிரந்தர தொழில்<br>தொ.இ: G/11947 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மகம் 1<br>கி.பா: 40 ¼ சூரி 8 செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/10583 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 4<br>கி.பா: சூரி. செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>விவாகரத்தானவர்<br>தொ.இ: G/11962 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: சூரி.செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: Bachelor of Engineering (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (அவுஸ்திரேலியா, லண்டன், கனடா விரும்பத்தக்கது)<br>தொ.இ: B/10584 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: 18 சூரி. செவ் 10 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/11971 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 3<br>கி.பா: சூரி 1 செவ் 12 இல்<br>தகைமை/தொழில்: படவரைஞர் (அரச)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/10586 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 4<br>கி.பா: 24 சூரி 9 செவ் 1 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த வ்ரன்<br>தொ.இ: G/11973 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்-2023

### யா/பெரியபுலம் ம.வி

### திருமதி. பத்மறஞ்சினி குலசிங்கம் (SLTS-I)



'நாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்'

ஆசிரியப் பணியை அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி இன்று 02.02.2023 இல் ஓய்வுபெறும் மணிவிழா நாயகியை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

Best Wishes

ஆசிரியர் சேவை விபரம்

| | | |
|---|---|---|
| யா/ கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் | - | 1990 - 1998 |
| யா/ உடுவில் மான்ஸ் ம.வி | - | 1998 - 2008 |
| யா/சென் ஜேம்ஸ் ம.வி | - | 2009 - 2010 |
| கிளி/புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம் | - | 2011 - 2012 |
| யா/பெரியபுலம் ம.வி | - | 2013 - 2023 |

[14432]

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ பெரியபுலம் ம.வி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 92





பிரிந்து சென்ற மரக் கிளையில் ஒரு ராட்சத வௌவால் தலைகீழாகத் தொங்கித் தவம் செய்து கொண்டிருந்தது. உடனே ஒரு யோசனை தோன்றியது.

சட்டென்று கைகளை உயர நீட்டி அந்த வௌவாலைப் பிடித்துக் கையில் ஆயத்தமாக வைத்துக் கொண்டான். சுளுந்துக் காரன் மரத்தைத் தாண்டி வந்ததும் வௌவாலை அவன் முகத்தின் மீது எறிந்தான். சுளுந்து கீழே விழுந்து வெளிச்சம் மங்கியது.

வௌவாலின் இறக்கையால் முகத்தில் அடிபட்டவன், "ஏ! ஏ! என்ன! என்ன?" என்று உளறினான். பலர் ஓடி வரும் சத்தம் கேட்டது. ஆழ்வார்க்கடியானும் ஓட்டம் பிடித்தான் அடுத்தக் கணம் அடர்ந்த காட்டுக்குள் புகுந்து மறைந்தான்.

பலர் சேர்ந்து, "என்ன? என்ன? என்று கூச்சலிட்டார்கள். சுளுந்து ஏந்திய ஆள் வௌவால் தன்னைத் தாக்கியது பற்றி விபரம் கூறத் தொடங்கினான். இதெல்லாம் திருமலையப்பனின் காதில் கொஞ்ச தூரம் வரையில் கேட்டுக் கொண்டிருந்தது.

சுளுந்து பிடித்தவன் மரத்தை நாடி வந்தான். அவன் அருகில் வர வர, வெளிச்சம் அதிகமாகி வந்தது. ஆச்சு! இதோ மரத்தின் முடுக்கில் அவன் திரும்பப் போகிறான். திரும்பிய உடனே சுளுந்து வெளிச்சம் தன் மேல் நன்றாய் விழப் போகிறது. அப்புறம் என்ன நடக்கும்? தப்பிப் பிழைத்தால் புனர் ஜன்மந்தான்!

திருமலையப்பனின் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. தப்புவதற்கு வழியுண்டா என்று சுற்றுமுற்றும் பார்த்தான். வழி காணவில்லை. அண்ணாந்து பார்த்தான் அங்கே மரத்திலிருந்து

### இருபத்தோராம் அத்தியாயம்
### திரை சலசலத்தது!

ஒரே சமயத்தில் ஒருவனுக்குள்ளே இரண்டு மனங்கள் இயங்க முடியுமா? முடியும் என்று அன்றைக்கு வந்தியத்தேவனுடைய அனுபவத்திலிருந்து தெரியவந்தது.

சோழ வள நாட்டிற்குள்ளேயே வளம் மிகுந்த பிரதேசத்தின் வழியாக அவன் போய்க் கொண்டிருந்தான். நதிகளில் புதுப்புனல் பொங்கிப் பெருகிக் கொண்டிருந்த காலம். கணவாய்கள், மதகுகள் மடைகளின் வழியாக வாய்க்கால்களிலும் வயல்களிலும் குபுகுபு வென்று ஜலம் பாய்ந்து கொண்டிருந்தது. எங்கே பார்த்தாலும் தண்ணீர் மயமாயிருந்தது. சோழ தேசத்தை 'வளநாடு' என்றும் சோழ மன்னனை 'வளவன்' என்றும் கூறுவது எவ்வளவு பொருத்தமானது? இப்படி எண்ணியவுடனே சோழ நாட்டுக்குச் சோழ மன்னனுக்கும் ஏற்பட்டிருந்த அபாயங்கள் நினைவுக்கு வந்தன.

இந்த நிலைமையில் தன்னுடைய கடமை என்ன? இளவரசர் கரிகாலர் கொடுத்த ஓலையை மட்டும் சக்கரவர்த்தியிடம் சேர்ப்பித்து விட்டுத் தன் கடமை தீர்ந்தது என்று இருந்து விடுவதா? இந்த இராஜ குலத் தாயாதிக் காய்ச்சலிலும் பூசலிலும் நாம் எதற்காகத் தலையிட்டுக் கொள்ள வேண்டும்? சோழ நாட்டுச் சிம்மாசனத்துக்கு யார் வந்தால் தான் நமக்கு என்ன? பார்க்கப் போனால், நம்முடைய குலத்தின் பூர்வீகப் பகைவர்கள் தானே இவர்கள்? சோழர்களும் கங்கர்களும் வைதும்பர்களும் சேர்ந்து கொண்டுதானே வாணகோப்பாடி ராஜ்யமே இல்லாதபடி செய்து விட்டார்கள்? இன்றைக்கு ஆதித்த கரிகாலர் நம்மிடம் அன்பாக இருந்ததினால் அந்த அநீதியெல்லாம் மறைந்து போய்விடுமா? சேச்சே! அந்தப் பழைய சம்பவங்களை அநீதியென்றுதான் எப்படிச் சொல்ல முடியும்? அரசர்கள் என்றால், ஒருவருக்கொருவர் சண்டையிடுவது இயற்கை.

அது போலவே வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வருவதும் இயற்கை. வென்றவர்கள் மீது தோற்றவர்கள் கோபங்கொள்வதில் பயன் என்ன? நம்முடைய மூதாதைகள் நல்ல நிலைமையில் இருந்த போது அவர்களும் மற்ற அரசர்களைக் கதிகலங்கத்தானே அடித்தார்கள்? அடியோடு அழித்து விடத்தானே பார்த்தார்கள்? ஆ! அது என்ன பாடல்? இதோ ஞாபகம் வந்து விட்டது. (தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## பரமார்த்த குரு கதைகள்

### பணம் நாறுமா?

(நேற்றைய தொடர்ச்சி)

ஒரு காலத்திலே ஓர் அரசன் மிகவும் பணத்தாசை பிடித்தவனாக இருந்தான். தன் மக்கள் மீது அதிகமாக வரிகளை விதித்தான். கட்டாதவர்களைக் கடுமையாகத் தண்டித்து வந்தான். இன்னதற்குத்தான் வரி விதிப்பது என்ற வரைமுறையில்லாமல் கண்டதற்கெல்லாம் வரி விதித்ததால் மக்கள் ஆத்திரம் அடைந்தார்கள்.

அந்த அரசனின் மைந்தன் இளவரசனுக்கே ஆத்திரம் வந்தது. தந்தையின் போக்கு மைந்தனுக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. இப்படியெல்லாமா குடிமக்களிடத்தில் வரி வசூலிக்க வேண்டும். வெட்கக் கேடு... அவமானம்' என்று அவன் தன் தந்தைக்குப் புத்தி சொன்னான்.

ஆனால் அரசன் அதைப் பொருட்படுத்தவே இல்லை. அவன் வரிகளாக நிறைய வசூலித்து இரும்புப் பெட்டியை நிரப்பி வைப்பதிலேயே குறியாக இருந்துவந்தான். பணப் பெட்டிகள் எல்லாம் நிரம்பிவிட்டன.

அரசன் மகிழ்ச்சியோடு ஒருநாள் தன் மகனை அருகே அழைத்தான் "அன்புள்ள மகனே, அதோ பார்... பணம் எப்படி நிரம்பியிருக்கிறது என்று பார்! அவ்வளவும் வரி போட்டுச் சேர்த்தது தான். நீ என்னவோ வரி என்று சொன்னாயே...! இப்போது நீ போய் அந்தப் பணத்தை எடுத்து மோந்து பார்!" என்றான்.

இளவரசன் தட்ட முடியாமல் வேண்டா வெறுப்பாக, பணப் பெட்டியருகே சென்றான். கொஞ்சம் காசுகளைக் கையில் எடுத்து நாசிக்கருகே வைத்து முகர்ந்து பார்த்தான்.

சிரித்துக் கொண்டே கேட்டான் மன்னன் "என்ன மகனே பணம் நாறுகிறதா?" என்று.

மகனுக்கு வேதனையாக இருந்தது. அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் வெறுப்பாகச் சிரித்து, "பணம் நாறவில்லை, மணக்கிறது!" என்றான். 'குணம்தான் நாறுகிறது' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான்.

"பார்த்தாயா...? வரிப் பணம் ஒன்றும் மணக்கவே செய்கிறது, பார்" என்று அட்டகாசமாகச் சிரித்தான் அரசன்.

வெறுப்பும் வேதனையும் பிடுங்கித் தின்ன, தவறி ஏதும் பேசாமல் மௌனமாகவே நின்றிருந்தான் இளவரசன்.

"இப்படித்தான் அந்த அரசன் தன் மகனுக்கு, எப்படிப் பணம் சேர்த்தாலும் ஒன்று தான். அது ஒன்றும் நாறப் போவதில்லை என்பதை உணர்த்தினான்" என்று தன் பேச்சை முடித்தான் அவன்.

குதிரைக் குதோஷம்!

அந்தச் சத்திரத்தில் அன்றைய பொழுதைக் கழித்தார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிவழுவாதவர் நாட்டிலேயே மும்மாரி. அடாது புரிந்தோர் நாட்டில் விடாது பெருமாரி.
- ஓர் அறிஞன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அநீதியான ஆட்சியில் அவமழையே பெய்யும்

மும்மாரி என்று நம் முன்னோர்கள் கூறுகின்ற மழை, உலக ஜீவராசிகளுக்குப் பயன் தரும் பொருட்டுப் பெய்வதாகும்.

இங்கு மும்மாரி என்பது வேதம் ஓதும் வேதியர்க்கு ஒரு மழை. உத்தமமாய் வாழும் மாதர்க்கு ஒரு மழை. நீதி தவறாது ஆட்சி செய்யும் மன்னர்க்கு ஒரு மழை என மும்மாரியாய் அமையும்.

இங்கு நீதி தவறாது ஆட்சி செய்யும் மன்னர்கள் - ஆட்சியாளர்கள் இருந்தால் போதும் மக்கள் வாழும் பொருட்டு மழை பெய்யும்.

மாறாக, ஆட்சியாளர்கள் நீதியற்றவர்களாக - மனிதப் பேரவலத்தை ஏற்படுத்துபவர்களாக - இன, மத, மொழி வேறுபாட்டை பின்பற்றுபவர்களாக இருந்தால், அந்த நாட்டில் பயிர் விளைய மழை பெய்யாது.

மாறாக, விளைந்த பயிரை அழிக்கவே மழை பெய்யும்.

கூடவே மக்கள் சமூகத்தில் அறம் ஒழிந்து அதர்மம் மேலோங்கும்போது, ஏழை மக்களை வதைக்கும் வியாபாரம் நடக்கும்போது, ஊழல், இலஞ்சம் என்பன தலைவிரித்தாடும்போது அந்நாட்டில் அவமழை பெய்து, இந்த நாடு அதர்மத்தின் வழியில் செல்கிறது. மக்கள் தர்மத்தை மறந்து அநீதிக்கு விசுவாசமாக இருக்கிறார்கள்.

மதத்தின் பேரால் இறைவனை சாத்தான் என்று நாக்கூசாமல் அழைக்கிறார்கள். உதவி என்ற போர்வையில் மதமாற்றத் துரோகத்தைச் செய்கிறார்கள்.

தவிர, மக்கள் சிலர் தாய்ச் சமயத்தை அவமதித்து மதம் மாறி பாவத்தில் வீழ்ந்து கிடக்கிறார்கள் என்பதை உணர்த்தவே அவமழை பெய்கிறது.

அந்தவகையில் விளைந்த நெல்லை அறுவடை செய்து உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற இந்த வேளையில், தொடர்ச்சியாக மழை பெய்து விளைந்த நெற்கதிர்களை வெள்ளத்தில் மூழ்கடித்து கைக்குக் கிட்டியது வாய்க்குக் கிட்டாமல் செய்கிறது எனில், இந்த நாட்டில் அநீதி உச்சமடைந்து விட்டது. அல்லல்பட்டு ஆற்றாது அழுகின்றவர்களின் துன்பம் தீர்க்க யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. இறைவழிபாடும் கிரியைகளும் வியாபாரமாக மாறிவிட்டன. அரசியல் அறம் பிழைத்து நிற்கிறது.

அதர்மம் செய்கின்றவர்களை தர்மவான்களாக மக்கள் நம்புகிறார்கள். அறியாமையும் சுயநலனும் உச்சம் பெற்று விட்டன என்ற உண்மைகள் இதனூடு உணர்த்தப்படுகின்றன.

ஆம், மாணிக்கவாசகரை மன்னன் சிறையில் அடைத்தபோது வைகைநதி பெருக்கெடுத்தோடியது என்ற செய்தி அறம் பிழைக்காமல் - நீதி தவறாமல் ஆட்சி நடத்தப்பட வேண்டும். இல்லையேல் இயற்கை தண்டிக்கும் என்ற இறைநீதியை உணர்த்துவதாகும்.

ஆக, இதுபற்றி அனைவரும் சிந்தித்துச் செம்மைப்படும்போது விளைந்தவை வீடேறும். அதற்கேற்றாற்போல் இறைவனின் திருவருள் துணைநிற்கும்.

# அமைதியின்மையின் போது அரசியலமைப்பு செயல் முறைகளை கடைபிடித்தோம்

## ஐ.நாவில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(ஜெனிவா)

அமைதியின்மையின் போது அரசியலமைப்பு செயல் முறைகளுக்கு இணங்கி செயற்பட்டதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாக உலகளாவிய காலமுறை ஜெனிவாவில் நேற்று நடைபெற்ற 42வது அமர்வில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் மீதான பொது நம்பிக்கையை அதிகரிக்கவும், பாராளுமன்றத்தை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கூறியுள்ளார்.

மேலும் ஜனநாயக ஆட்சி மற்றும் நிதிப் பொறுப்புணர்வை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐநா மனித உரிமைகள் பொறிமுறைகளுடனான ஒத்துழைப்பு, அரசியல் சீர்திருத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மற்றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளை சுட்டிக்காட்டியுள்ளார்.

பாலின அடிப்படையிலான வன்முறையைக் கையாள்வது மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களை பாதுகாப்பதற்கான முயற்சிகள் குறித்தும் தெரிவித்துள்ளார். (ம-7)

### பயண சீட்டுக்கு பதிலாக

## புதிய போக்குவரத்து அட்டை அறிமுகம்

(கொழும்பு)

பேருந்து மற்றும் புகையிரத டிக்கெட்டுக்களுக்கு பதிலாக புதிய போக்குவரத்து அட்டையை அறிமுகம் செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்தில் போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்கு வரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை போக்கு வரத்து சபையை உள்ளடக்கி ஒப்பந்தம் மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.

இத் திட்டம் மாகும்புர மற்றும் காலி அதிவேக நெடுஞ்சாலையில் பேருந்துகளுக்கான இந்தப் புதிய சேவை உடனடியாக ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும், வெகு விரைவில் இந்த முறை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது அத்தோடு மார்ச் மாத இறுதிக்குள் மொபைல் செலுத்துகைகளும் செயற்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மோ.சைக்கிள் விபத்து தாயும் மகனும் பலி

(கொழும்பு)

குருநாகல் - தம்புள்ளை பிரதான வீதியின் கொகரெல்ல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தாயும், மகனும் உயிரிழந்துள்ளனர்.

பொல்கொல்ல பிரிவெனாவிற்கு அருகில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் தேவகிரிய, தித்தெனிய பிரதேசத்தினை சேர்ந்த 39 வயதுடைய மகனும், 62 வயதுடைய தாயும் உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட போது, பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில், பேருந்தின் பின் சில்லில் சிக்கி இருவரும் படுகாயமடைந்த நிலையில் கொகரெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பில் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், கொகரெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# உயர்தர பரீட்சை காலத்தில் மின் துண்டிப்பை தவிர்க்குக

## உயர் நீதிமன்றில் மனு

(கொழும்பு)

க.பொ.த உயர்தர பரீட்சைக் காலத்தில் தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குமாறு மின்சார சபைக்கு உத்தரவிடுமாறு கோரி பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனிடையே, க.பொ.த உயர்தரப் பரீட்சை நிறைவடையும் வரையில், மின் துண்டிப்பை தவிர்க்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடக்கோரி இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலினும் உயர் நீதிமன்றில் நேற்று அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்தார்.

மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர், மின்சார சபையின் தலைவர், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், சட்டமா அதிபர் உள்ளிட்டோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அத்துடன், இணக்கப்பாட்டை மீறி உயர்தர பரீட்சைக் காலத்தில் மின் துண்டிப்பை மேற்கொண்ட மின்சார சபைக்கு எதிராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தது. (ம-7)

# இனவாதம், மதவாதத்தை தூண்டுவோர் எம்மிடம் இல்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(அக்கரைப்பற்று)

இனவாதம் மற்றும் மதவாதத்தை தூண்டுவோர் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இன வாதம் மதவாதத்தால் எமது நாட்டு மக்கள் பல துன்பங்களை அனுபவித்தனர், கோவிட் காலத்தில் அடக்கமா? தகனமா? என்ற பிரச்சினை எழுந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பெரிய கட்சிகள் வாயை மூடிக் கொண்டிருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தி ஒவ்வொரு இனத்திற்கும், மதத்திற்கும், மனித நேயத்திற்குமாய் ஒன்றாய் முன்நிற்பதாகவும் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஆனாலும், சில பாராளுமன்ற உறுப்பினர்களும்கூட மொட்டுவுடன் இணைந்து இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் வகையில் செயற்பட்டனர் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியில் இவ்வாறான கோழைத்தனமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தூய சிங்கள பௌத்தம் ஒருபோதும் இனவாதம் மற்றும் மதவாதத்தின் அடிப்படையில் செயற்படாது எனவும், புத்தர் கூட அனைத்து உயிரினங்களுக்கும் நல்லதையே நாடி நல்லதையே போதித்தார் எனவும், அந்தக்கோட்பாட்டைப் பின்பற்றும் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாங்களும் அனைத்து இனங்களுக்காகவும் மதங்களுக்காகவும் சரிசமமாக முன் நிற்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கராயன்-யாழ்ப்பாணத்திற்கான நேரடி பேருந்து சேவை வேண்டும்

## பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயனில் இருந்து முக்கொம்பன் பூநகரி வழியாக யாழ்ப்பாணத்திற்கான நேரடி இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்து சேவைகளை நடத்துமாறு அக்கராயன் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்னர் முக்கொம்பன் பூநகரி வழியாக யாழ்ப்பாணத்திற்கு நடைபெற்ற ஒரேயொரு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை கந்தபுரத்திற்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான மூன்று கிலோ மீற்றர் வீதியில் 15 இற்கு மேற்பட்ட குழிகள் காரணமாக இடைநிறுத்தப்பட்ட நிலையில் தற்போது அக்கராயன் பிரதேச மக்கள் கிளிநொச்சி நகரத்திற்கு சென்றே யாழ்ப்பாணம் பயணிக்க வேண்டி உள்ளது.

இதன் காரணமாக வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம், அக்கராயன்குளம், கந்தபுரம், கோணாவில், அமதிபுரம், ஆரோக்கியபுரம், கண்ணகைபுரம், முக்கொம்பன், சின்னப்பல்லவராயன்கட்டு, யுனியங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் முக்கொம்பன் பூநகரி வழியாக யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலையில் நீண்ட நேரம் கிளிநொச்சிக்கு பயணம் செய்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டி உள்ளது.

இரு ஆண்டுகளில் மூன்று கிலோ மீற்றர் வீதி புனரமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவோ கிளிநொச்சி மாவட்டச் செயலகமோ நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே அக்கராயனில் இருந்து பூநகரி முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்திற்கான நேரடி பேருந்து சேவைகள் நடைபெறாமல் உள்ளன.

குறித்த வீதியினை புனரமைத்து போக்குவரத்து சேவை நடத்துவதன் மூலம் முக்கொம்பன் மகா வித்தியாலயம், கண்ணகைபுரம் அ.த.க பாடசாலை, கந்தபுரம் இல.01, இல.02 பாடசாலைகள், அமதிபுரம், ஆரோக்கியபுரம் பாடசாலைகள், அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், யுனியங்குளம் பாடசாலை, கோணாவில் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், கிராமங்களின் மக்கள் போக்குவரத்து நன்மையடைவர்கள்.

இதனை விட மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அக்கராயன் பிரதேச மருத்துவமனைக்கு இலகுவாக பயணிக்க முடியும். (4-6-350)

# சீரற்ற காலநிலை விவசாயிகள் பாதிப்பு



(மன்னார்)

மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்ற நிலையில் விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை காரணமாக அறுவடைக்குத் தயாரான நிலையில் காணப்பட்ட நெற்செய்கைகள் சரிந்துள்ளதுடன் வயல் நிலங்களுக்குள் நீரும் அதிகளவு தேங்கியுள்ளது.

அதேநேரம் அறுவடையின் பின்னர் வீதிகளில் உலரவிடப்பட்டிருந்த பல தொன் நெல் முற்றுமுழுதாக மழையில் நனைந்துள்ளது.

முன்னதாகவே பசளை, உரம், எரிபொருள் விலை என அனைத்தின் விலையேற்றத்தின் மத்தியிலும் விவசாய செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடம் நெல் மிகவும் அடிமாட்டு விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டு வரும் நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக மன்னார், கிளிநொச்சி மாவட்ட ஏழை விவசாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர். (4-6-285)



லண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் நீம் நிறுவன அனுசரணையில் வடகிழக்கு பகுதியில் பல்வேறு சமூக பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் வவுனியாவில் 100 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்- சதீஸ்)

# வன்னி பிராந்தியத்திற்கு புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்



(நெளுக்குளம்)

வன்னிப் பிராந்திய புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக ஓசான் கேவவிதாரண நேற்று முன்தினம் தனது அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் மனித உரிமைகள் பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய ஓசான் கேவவிதாரண வன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபராக தனது கடமைகளை சர்வமத சமய நிகழ்வுகளுடன் பொறுப்பேற்றுக் கொண்டார். (4-6-299)

# மயங்கி விழுந்து மரணமடைந்த முதியவரை அடையாளம் காண உதவுங்கள்

## வவுனியா பொலிஸார் கோரிக்கை

(குருமன்காடு)

ஏ9 வீதியில் மயங்கி விழுந்து மரணமடைந்த முதியவரை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் கோரியுள்ளனர்.

வவுனியா ஏ9 வீதி, மூன்றுமுறிப்பு பகுதியில் கடந்த 13 ஆம் திகதி வீதியில் பயணித்த முதியவர் ஒருவர் மயங்கி விழுந்துள்ளார். அவ் வீதியால் சென்றவர்கள் முதியவர் வீதியில் கிடப்பதை அவதானித்து அவசர நோயாளர் காவு வண்டிக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து, அவ்விடத்திற்கு வந்த நோயாளர் காவு வண்டி குறித்த முதியவரை நோயாளர் காவுவண்டியில் ஏற்றி வவுனியா மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற போதும், மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்னரே அவர் மரணமடைந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த முதியவர் 70 வயது மதிக்கத்தக்கவர். 5 அரை அடி உயரமுடையவர். தாடியுடன் உள்ள அவர் கறுப்பு மற்றும் மஞ்சள் நிறம் கலந்த சேட்டும் நீல சாரமும் அணிந்துள்ளார். தனது இரண்டு கைகளிலும் பச்சை குத்தியுள்ளதுடன், இடது கையில் பிள்ளையார் உருவமும் வலது கையில் நாக பாம்பு உருவமும் குத்தியுள்ளார். இவர் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் வவுனியா சிறு குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி அல்லது வவுனியா பொலிஸ் நிலையத்தில் தகவல் வழங்குமாறு பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (4-6-250)


**பொது அறிவித்தல்**
**மாநகர சபை, யாழ்ப்பாணம், பாதீடு-2023**

**யாழ்.மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டிற்கான பாதீடு (வரைபு) 2023.02.01 தொடக்கம் 2023.02.10 ஆம் திகதி வரை**

- யாழ்.மாவட்டச் செயலகம்
- யாழ்.பிரதேச செயலகம்
- நல்லூர் பிரதேச செயலகம்
- யாழ்.மாநகர சபை-பொதுசனத் தொடர்பு பகுதி
- யாழ்.பொது நூல் நிலையம்
- நவீன சந்தை-வாடிக்கையாளர் சேவை நிலையம்

ஆகிய இடங்களில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் இவ் வரைபு பாதீட்டினை பரிசீலித்து பாதீட்டினை மேலும் முன்னேற்றகரமானதாக ஆக்குவதற்கு தேவையான தங்களது கருத்துக்கள், முன்மொழிவுகளினை எதிர்வரும் 2023.02.10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாநகர சபை செயலகத்திற்கு எழுத்து மூலம் அறியத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**இம்மானுவல் ஆனல்ட்**
**முதல்வர், மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-5884)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 150 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 260 | 320 | 250 | 300 |
| தக்காளி | 200 | 250 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 200 |
| கோவா | 50 | 70 | 100 | 120 |
| கரட் | 120 | 150 | 200 | 200 |
| பூசணி | 80 | 100 | 100 | 100 |
| புடோல் | 200 | 150 | 150 | 140 |
| வாழைக்காய் | 200 | 200 | 160 | 160 |
| சின்ன வெங்காயம் | 300 | 400 | 600 | 500 |
| பெரிய வெங்காயம் | 180 | 170 | 180 | 160 |
| பாகற்காய் | 250 | 350 | 250 | 350 |
| வெண்டிக்காய் | 280 | 350 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 250 |
| லீக்ஸ் | 300 | 250 | 300 | 300 |
| பீற்றூட் | 160 | 160 | 200 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 400 |
| முருங்கைக்காய் | 1600 | 1400 | 1400 | 1500 |
| போஞ்சி | 300 | 250 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 160 | 160 |
| கீரை – 1 பிடி | 100 | 70 | 50 | 50 |
| தேசிக்காய் | 50 | 50 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 90 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 330 | 250 |
| வெங்காயப்பூ | 160 | 140 | 200 | 300 |
| முள்ளங்கி | 40 | 80 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 60 | 60 |
| வல்லாரை | 50 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | 150 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 அத்தியாவசிய...

விலையைக் குறைக்க லங்கா சதொச நிறுவனம் தீர்மானித்துள்ளது.

அதன்படி, காய்ந்த மிளகாய் 1 கிலோ 1675 ரூபாய், பெரிய வெங்காயம் 1 கிலோ 165 ரூபாய், சிவப்பு பச்சை அரிசி (உள்ளூர்) 1 கிலோ 169 ரூபாய், மா 1 கிலோ 230 ரூபாய்.

இதன்படி, மேற்குறிப்பிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச நிலையங்களிலும் நுகர்வோர் பெற்றுக்கொள்ள முடியும். (ம-7)

## பயங்கரவாத...

சட்டத்தையும் உருவாக்கவுள்ளதாக வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி உறுதியளித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்றும், ஓரினச்சேர்க்கையை குற்றமாக கருதுவதை நீக்க வேண்டும் என்றும் பிரித்தானியா மற்றும் அமெரிக்கா செய்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் வகையில் சப்ரி இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற 42வது அமர்வின்போது ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உலகளாவிய கால ஆய்வு (UPR) செயற்குழுவில் பிரித்தானியா மற்றும் அமெரிக்காவின் பிரதிநிதிகளால் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. (ம-7)

## பயங்கரவாத சட்...

வேண்டும் என அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் கனடா ஆகிய நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

அத்தோடு அரச சார்பற்ற நிறுவனங்களின் சுதந்திரத்தை பாதுகாக்க வேண்டும் என்றும் மனித உரிமைகளை மீறுபவர்கள்மீது வழக்கு தாக்கல் செய்யுமாறும் கனடா வலியுறுத்தியுள்ளது.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலை நாட்டவும் பொலிஸார் சித்திரவதை நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என்றும் கொலம்பியா பரிந்துரைத்துள்ளது.

மேலும் அமைதியான போராட்டத்தின் மீதான தாக்குதல்கள் மற்றும் பிற நடவடிக்கைகள் குறித்து விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு டென்மார்க் பரிந்துரைத்துள்ளது. (ம-7)

## 13வது திருத்தம்...

ரணில் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உப இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்டிற்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது நாடு எதிர்நோக்கும் மிகவும் கடினமான சூழ்நிலையில் அமெரிக்கா வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நன்றியைத் தெரிவித்தார்.

இதன்போது, இலங்கையை வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்கு தமது அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான உப இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், எழுந்துள்ள பிரச்சினைகளுக்கான அவசரத் தீர்வுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என விக்டோரியா நூலண்ட் சுட்டிக்காட்டினார்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது உட்பட அது தொடர்பில் சிறிய கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

அதிகரித்துவரும் போதைப்பொருள் வர்த்தகத்திற்கு எதிராக தொடர்ச்சியாக எடுக்கும் முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டன, அமெரிக்கா அதற்கு தனது முழு ஆதரவையும் வழங்கும் என்றும் வலியுறுத்தப்பட்டது. (ம-7)

## தமிழ் மக்களுடன்...

டம் அமெரிக்கத் தூதுவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க செயலாளர் தமிழ் பேசும் கட்சித் தலைவர்களுடன் நேற்று கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போதே இவ்வாறு உறுதிமொழி வழங்கினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மனோ கணேசன்,

"சொல்வதை செயலில் காட்டும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, உங்கள் நல்லுறவை பயன்படுத்தி கூறுங்கள்" என இலங்கை வந்த அமெரிக்க ராஜாங்க திணைக்கள அரசியல் துணை செயலாளர் விக்டோரியா நூலாண்டுக்கு தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்கள் என்ற முறையில் தெரிவித்தோம்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித், முன்னாள் ஜனாதிபதி மகிந்த, ஜேவிபி தலைவர் அநுர ஆகியோரிடம் 13ம் திருத்தம் தொடர்பான சாதகமான நிலைப்பாடு இருக்கிறது. அதைக்கூட அமுல் செய்ய அவர் தயங்குகிறார்.

வடகிழக்கு தமிழ் கட்சிகள், இந்திய வம்சாவளி மலையக கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் ஆகிய மூன்று தரப்புகள் இப்போது இலங்கை பிரச்சினை தொடர்பில் இருக்கின்றன. இது கடந்த கால சமாதான பேச்சுவார்த்தை சூழலின் பின் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஆகும்.

ஆகவே இப்போது இந்த மூன்று தரப்புடனும் தனித்தனியாக பேசும்படியும், அதன்பின் சர்வ கட்சி மாநாட்டை நடத்தும்படியும், ஜனாதிபதிக்கு ஆலோசனையும் கூறுங்கள், என நான் அவரிடம் கூறினேன்.

இதை அனைத்து தமிழ் பேசும் கட்சிகளும் ஆமோதிக்கிறீர்களா என செயலாளர் விக்டோரியா நூலாண்ட் எம்மிடம் வினவினார். இந் நிலையில் அனைத்து தமிழ் பேசும் கட்சி பிரதிநிதிகளும் இந் நிலைப்பாட்டை ஆதரித்து, அனைவரிடமும் பேச சொல்லுங்கள் என்று கூட்டாக அமெரிக்க ராஜாங்க திணைக்கள அரசியல் துணை செயலாளர் விக்டோரியாவிடம் தெரிவித்தனர்.

தமிழ் பேசும் கட்சிகளின் தலைவர்களின் இந்த நிலைப்பாடுகளை ஜனாதிபதிக்கு, நாடு திரும்பும் முன் தெரிவிப்பதாக அரசியல் துணை செயலாளர் விக்டோரியா நூலாண்ட் எம்மிடம் உறுதியளித்தார்.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை படிப்படியாக ஆராய்ந்து தீர்வு காணும் செயன்முறை அமுலாக வேண்டும். அதற்கு அமெரிக்கா துணை இருக்கும் என ராஜாங்க திணைக்கள அரசியல் துணை செயலாளர் எம்மிடம் கூறினார் என்றார். (ம-7)

## தமிழர்களின்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இந்திய வம்சாவளி தமிழர் உட்பட அனைத்து மக்களினதும் மனித உரிமைகளையும் இலங்கை உறுதி செய்ய வேண்டுமெனவும் இந்தியத் தூதுவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-7)

## பெற்றோல்...

வுள்ளது.

இதன்படி, லங்கா பெற்றோல் 92 ஒக்டேனின் விலை 370 ரூபாயிலிருந்து 30 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

புதிய விலை 400 ரூபாயாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஏனைய ரக பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றின் விலைகளில் மாற்றம் மேற்கொள்ளப்படவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## வடக்கில் தொடர்...

150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1473
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 8 9 0 1 2 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1048
Q 16 44 70 74
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.02.01
சீட்டிழுப்பு இலக்கம் 3260
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
C 11 15 63 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1366
G 12 19 28 39 70

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.01
சீட்டிழுப்பு இலக்கம் 327
மிதுனம் 02 38 47 53 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/01
சீட்டிழுப்பு இலக்கம் 5018
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
K 7 5 1 1 4 8
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1993
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.02.01
தினம் புதன்கிழமை
A 15 58 64 67
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,561,400/-
DLB

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.01
சீட்டிழுப்பு இல : 4154
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,350,040/-
வெற்றி இலக்கங்கள்
04 40 41 63 L
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,180,910/-
திகதி 2023-02-01
வெற்றி வாரம் 3705
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 10 19 20 54
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,479,140/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 34 18 22 41 77
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1169
வர்ணம் இள நீலம்
திகதி 2023.02.01 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 302,609,984.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1893
சீட்டிழுப்பு திகதி 2023-02-01
வெற்றி இலக்கங்கள் 25 30 32 59 Y
அதிர்ஷ்ட சுப்பர் பரிசுத்தொகை ரூ. 39,552,006.80
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1819
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023 02 01
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,290,820/-
வெற்றி இலக்கங்கள் 04 22 57 70 M
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம், நல்லிணக்கத்தை வலுப்படுத்த முக்கிய தருணம்

## அமெரிக்க இராஜாங்க செயலாளர் விக்டோரியா

(கொழும்பு)

இலங்கை தனது ஜனநாயகம், நல்லிணக்கம் ஆட்சிமுறை ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான முக்கிய தருணம் இதுவென இலங்கைக்கு விஜயம்மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களிற்கான உதவி செயலாளர் விக்டோரியா நுலன்ட் தெரிவித்துள்ளார்.



அவர்மேலும் தெரிவிக்கையில், கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு மீண்டும் திரும்பிவர முடிந்துள்ளமை மிகச்சிறப்பான விடயம்.

நீங்கள் உங்களின் 75வது சுதந்திரதினத்தை கொண்டாடும் தருணத்தில் நான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளேன். இது உங்கள் வரலாற்றில் மிக முக்கியமான தருணம் என்பதை நான் உங்களிற்கு தெரிவிக்க வேண்டியதில்லை.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் வளர்ச்சிப் பாதையில் செலுத்துவதற்கும் அரசாங்கம் சர்வதேச அமைப்புகள் கடன் வழங்கு நாடுகளுடன் இணைந்து செயற்படுகின்ற அதே வேளை இலங்கை தனது ஜனநாயகம் நல்லிணக்கம் ஆட்சிமுறை ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான முக்கிய தருணமாகவும் இது காணப்படுகின்றது.

இலங்கை பயங்கரவாத தடைசட்டத்தை சீர்திருத்தும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும், அதன் மூலம் அது சர்வதேச தராதரங்களை பூர்த்தி செய்வதை உறுதி செய்யவேண்டும்.

இன்று எங்களிற்கு ஜனாதிபதி விக்கிரம சிங்கவை சந்திப்பதற்கும் இந்த குழப்பமான, தருணத்தில் இலங்கைக்கான அமெரிக்காவின் உதவி குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கும் குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை விரைவில் முடிப்பதற்கான எங்களின் ஆதரவு குறித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

மேலும் அமெரிக்கா 13 மில்லியன் டொலர்களை இலங்கையின் 850 அரச பாடசாலைகளை சேர்ந்த மாணவர்களிற்கு மதிய உணவை வழங்குவதற்காக வழங்குகின்றது என்பதையும் நான் இன்று அறிவிக்கின்றேன் என்றார். (ம-7)

# உள்ளூராட்சி மன்ற சபைகளை கலைக்கும் அதிகாரம் இல்லை

## தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருக்கிறோம். அத்துடன் உள்ளூராட்சி மன்ற சபைகளை கலைக்கும் அதிகாரம் உள்ளூராட்சிமன்ற அமைச்சருக்கே இருக்கிறது.

அதனால் இதுதொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் கேட்டிருக்கிறோம் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் தொடர்பாக குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணை நடவடிக்கை தொடர்பில் ஆணைக்குழுவுக்கு திருப்தியடைய முடியாமல் இருக்கிறது.

அதேபோன்று தேர்தலை நடத்துவதற்காக அரச அமைப்புகளில் இருந்து கிடைக்கப் பெறும் ஆதரவு போதுமானதாக இல்லாமல் இருப்பது தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளேன்.

அத்துடன் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல் தொடர்பான விசாரணை நடவடிக்கை துரிதமாகவும் செயற்பாடுடையதாகவும் இருக்க வேண்டும்.

அச்சுறுத்தலுக்கு ஆளாகியுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு தொடர்பில் திருப்தியடைய முடியும் என்பது தொடர்பாகவும் தெரிவித்திருக்கின்றேன்.

அத்துடன் யார் என்ன சொன்னாலும் உயர் நீதிமன்றத்தின் நிலைப்பாட்டின் பிரகாரமே ஆணைக்குழு செயற்படுகிறது. நிதிச் செயலாளர் பாராளுமன்ற நிதிக் குழுவுக்கு வந்த சந்தர்ப்பத்தில், நிதி பிரச்சினை தொடர்பாக குறிப்பிட்டிருந்த போதும் தேர்தலுக்கு நிதி வழங்க முடியாது என தெரிவிக்கவில்லை.

மேலும், உள்ளூராட்சி மன்ற சபைகளை கலைக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை. அது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சருக்கே இருக்கிறது. அதனால் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடம் கேட்டிருக்கிறோம் எனவும் குறிப்பிட்டார். (ம-7)

## கண்ணீர் அஞ்சலி



கொழும்பில் இடம்பெற்ற ரயில் விபத்தில் அகால மரணமடைந்த

ஊடகவியலாளர்

**எஸ்.என்.நிபோஜிதன்**

பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வலம்புரி நிர்வாகம்


**காணி விற்பனைக்கு**

தாவடி மானிப்பாய் வீதி, தாவடி வடக்கில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 255 0807 (14474)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ் நகரை அண்டிய பகுதியில் சிறிய வீடு/ பகுதியாக இருப்பினும் வாடகைக்குத் தேவை.

(4 பேர் மட்டும், அரச உத்தியோகத்தர்)

077 515 2015 (14475)

**கார்/வான் வாடகைக்கு**

கார்கள்/வான்கள் நாளாந்த வாடகைக்கு விடப்படும்.

RSP Rent a Car

077 898 9691 (14477)

**வீடு விற்பனைக்கு**

மன்னார் சித்திவிநாயகர் பாடசாலைக்கு அண்மையாக வீடு விற்பனைக்கு உண்டு

தொடர்புக்கு : 076 105 6343 / 077 261 4549 (14467)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி - வீதி, இலங்கை வங்கிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு. (வசிப்பதற்கும், நிறுவனங்களுக்கும், களஞ்சியப்படுத்தலுக்கும் உகந்தது.)

T.P : 077 669 6814
077 602 4591 (14469)

**பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு**

A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-5885)

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை - 30,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் - 35,000/-

077 060 0777

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14446)

076 825 7716 (ஆகாஸ்)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.